முருகப்பெருமான் துணை

**மகான் கபிலர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.01.2024**, திங்கட்கிழமை

1. மறைபோற்றும் குரு அரங்கனே
   மாதவராஜனே ஞான தேசிகனே
   அறம் கூட்டி இந்த கலியுகத்தில்
   அனைவருக்கும் அழியாமை தர வந்த
2. வந்தநல் ஆறுமுக அவதாரமே
   வள்ளலே உன் பெருமை கூறி
   சிந்தைபட சோபகிருது சிலைதிங்கள்
   செப்பிட மூவேழீர் திகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் மார்கழி மாதம் 23 ம் நாள், 08.01.2024, திங்கட்கிழமை)
3. வாரமதில் கபிலர் யானும்
   வழங்குவேன் துல்லிய ஆசி
   சோரமின்றி நல்லுலகம் படைத்து
   சுபிட்சம் அருளவந்த ஞானி
4. ஞானியரின் உண்மை வழிகளில்
   நம்பிக்கை வைத்து வர
   ஞானிகள் பேரில் பூசை செய்து
   ஞானபூசையும் அன்னதான சேவை
5. சேவை ஆற்றி வருதலுற
   செய்கின்ற அன்னதான பலம்
   அவனியில் சோதி வழிபாடுமே
   ஆபத்தில்லா பாதுகாப்பு நல்வாழ்வு தரும்
6. தருகவே ஞானத்தலைவன் முருகனை
   தக்கபடி வணங்கும் வழிமுறைகள்
   ஆறுமுகனாரை காணும் காட்சி வாய்ப்பு
   அனைத்தும் தானாக அரங்கன்

7. அரங்கன் தயவாலே நடந்தேறும்
அகிலம் அரங்கன் அவதாரத்தை
வரங்களாக அறிய உணரவே
வையகத்தில் அற்புதம் நிகழும்
8. நிகழவே நீதி அரசர்களாக
நிலவுலகில் ஆளுமைகள் எல்லாம்
வகைபட மாற்றம் கண்டுமே
வருங்காலம் சீர் கேடுகள் இல்லாத வண்ணம்
9. வண்ணமுடன் நிர்வாகம் தேறி
வளர்ச்சி நிலையை உயர்வாக
மண்ணுலகம் கண்டு செழிக்கும்
மக்களுள் சாமானியரும் மதிக்கப்பட்டு
10. மதிக்கப்பட்டு ஞானிகள் வெளிப்பட
மகத்துவம் பல புவியில் நடக்கும்
விதிவழி என மக்கள் முடங்கிடா
வேலவன் ஆசிபட வாழ்வாதாரம்
11. வாழ்வாதாரம் சிறந்து பாதுகாப்பு
வசதிநிலை கூடி உயர்வர்
தாழ்விலா ஞானவாழ்வு பெறுவர்
தாமுரைத்த துல்லிய ஆசி முற்றே

—சுபம்—